பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
14 12 2025 12 40
ஞாயிற்றுக்கிழமை நண்பகல்

ஆகாஷவாணி செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

- குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தேசிய எரிசக்தி பாதுகாப்பு விருதுகளை புதுதில்லியில் இன்று வழங்குகிறார்.

- வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து காங்கிரஸ் கட்சி குழப்பத்தை ஏற்படுத்தி வருவதாக பிஜேபி குற்றம்சாட்டியுள்ளது.

- மத்தியப் பிரதேசத்தில் வீராங்கனா துர்காவதி புலிகள் சரணாலயத்தில் சிறுத்தைகள் பாதுகாக்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு மோகன் யாதவ் தெரிவித்துள்ளார்.

- பங்களாதேஷில் தேர்தல் ஆணைய அலுவலர்களுக்கு போதிய பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று அந்நாட்டு தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.

- சென்னையில் நடைபெறும் உலகக் கோப்பை ஸ்குவாஷ் போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியா இன்று ஹாங்காங் சீனாவை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

தேசிய எரிசக்தி பாதுகாப்பு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

புதுதில்லியில் இன்று நடைபெறும் விழாவில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, தேசிய எரிசக்தி பாதுகாப்பு விருதுகளை வழங்குகிறார்.

எரிசக்தி பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 14 ஆம் தேதி இத்தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

தேசிய எரிசக்தி பாதுகாப்பு விருதுகளுக்காக நடப்பாண்டு 680 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதாக மத்திய எரிசக்தித்துறை தெரிவித்துள்ளது.

>>><><><><<<

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து காங்கிரஸ் கட்சி மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தி வருவதாக பிஜேபி குற்றம்சாட்டியுள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் திரு Sambit Patra, தேர்தல் சீர்திருத்தம் குறித்து நாடாளுமன்றத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் எழுப்பிய ஒவ்வொரு கேள்விக்கும் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா பதிலளித்ததை அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் ஜனநாயகம் வலுவானது என்றும், அரசியல் சாசன அமைப்புகளை அவமதிக்கப்படக்கூடாது என்றும் திரு Sambit Patra கூறினார்.

>>><><><<<

மத்தியப் பிரதேசத்தில் வீராங்கனா துர்காவதி புலிகள் சரணாலயத்தில் சிறுத்தைகள் பாதுகாக்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு மோகன் யாதவ் தெரிவித்துள்ளார்.

ஆப்பிரிக்காவில் இருந்து Kuno தேசிய வனவிலங்கு பூங்காவிற்கு கொண்டு வரப்பட்ட சிறுத்தைகள் பாதுகாக்கப்படும் என்று அவர் கூறினார்.

சாஹர் மாவட்டத்தில் உள்ள வீராங்கான துர்காவதி புலிகள் சரணாலயத்தில் சிறுத்தைகளையும் பாதுகாப்பாக வைக்க அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்திருந்தது.

மத்தியப்பிரதேசத்தில் Shopur, காந்தி சாஹருக்கு அடுத்தபடியாக மூன்றாக சிறுத்தைகள் சரணாலயமாக இது மேம்படுத்தப்படவுள்ளதாகவும் திரு மோகன் யாதவ் குறிப்பிட்டார்.

குனோ தேசிய வனவிலங்கு பூங்காவில் 28 சிறுத்தைகளும், காந்தி சாஹர் சரணாலயத்தில் 2 சிறுத்தைகளும் உள்ளன என்றும், Botswana-வில் இருந்து மேலும் 8 சிறுத்தைகள் அடுத்த மாதம் இப்பூங்காவுக்கு கொண்டு வரப்படும் என்றும் அம்மாநில முதலமைச்சர் தெரிவித்தார்.

>>><><><<<

பங்களாதேஷில் அடுத்த ஆண்டு பிப்ரவரி 12 ஆம் தேதி நாடாளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், தேர்தல் ஆணைய அலுவலர்களுக்கு போதிய பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று அந்நாட்டு தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.

பங்களாதேஷ் காவல்துறை தலைவருக்கு தேர்தல் ஆணையம் அனுப்பியுள்ள கடிதத்தில், தலைமை தேர்தல் ஆணையர் திரு நசிருதீன், மற்றும் தேர்தல் ஆணையர்களுக்கு போதிய பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

பங்களாதேஷில் பொதுத் தேர்தல் கடந்த 11 ஆம் தேதி அறிவித்ததை அடுத்து, அங்கு பல்வேறு பகுதிகளில் வன்முறை ஏற்பட்டுள்ளதால், தேர்தல் ஆணைய அலுவலர்களுக்கு பாதுகாப்பை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

>>><><><<<

ஜம்மு கஷ்மீர் எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஊடுருவலை தடுக்க இந்திய ராணுவப் படையினரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உள்ளது.

கடும் பனிப்பொழிவையும் பொருட்படுத்தாமல் ராணுவத்தினர் அங்கு ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

குளிர்காலத்தில் தீவிரவாதிகள் எல்லைத் தாண்டி ஊடுருவதை தடுக்க அப்பகுதியில் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளதாக ராணுவ அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

>>><><><<<

தமிழகத்தில் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி விளையாட்டுப் போட்டிகளின் நான்காவது கட்டம் நடைபெற்றது.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் தமது சமூக வலைதளப்பதிவில் வெளியிட்டுள்ள செய்தியில், மேட்டுப்பாளையம் பகுதியில் இந்த விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றுள்ள அனைத்து வீரர்களுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

>>><><><<<

கேரளாவில் இருந்து தமிழக வனப் பகுதிகளுக்கு யானைகள் இடம்பெயர்ந்து வருகின்றன.

நீலகிரி மாவட்டத்தில் கேரள எல்லைப் பகுதியில் வாகன ஓட்டிகள் பாதுகாப்பாக பயணம் மேற்கொள்ளுமாறு வனத்துறையினர் கேட்டுக் கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் – சரவணன் – 38 செகண்ட்ஸ்)*

*>>><><><><<<*

*பஞ்சாபில் உள்ளாட்சித் தேர்தல் தற்போது நடைபெற்று வருகிறது.*

*சுயேச்சை வேட்பாளர்கள் உட்பட 9 ஆயிரம் வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.*

*ஆம் ஆத்மி கட்சி, பிஜேபி, காங்கிரஸ், சிரோன்மணி அகாலிதள் உள்ளிட்ட கட்சி வேட்பாளர்கள் இத்தேர்தலில் போட்டியிடுகின்றனர்.*

*காலை 8 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 4 மணி வரை நடைபெறும் என்று மாநில தேர்தல் ஆணையர் திரு ராஜ்குமார் சௌதிரி தெரிவித்துள்ளார்.*

*பதிவான வாக்குகள் வரும் 17 ஆம் தேதி எண்ணப்படும்.*

*>>><><><><<<*

*தெலங்கானாவில் 3 ஆயிரத்து 911 ஊராட்சித் தலைவர்களுக்கும், 29 ஆயிரத்து 913 ஊராட்சி உறுப்பினர்களுக்குமான தேர்தல் தற்போது நடைபெற்று வருகிறது.*

*வாக்குப்பதிவு பிற்பகல் 1 மணி வரை நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.*

*ஊராட்சித் தலைவர் பதவிகளுக்கு 12 ஆயிரத்து 782 வேட்பாளர்கள் களத்தில் உள்ளதாகவும், உறுப்பினர் பதவிக்கான 21 ஆயிரம் வேட்பாளர்கள் களத்தில் உள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*தெலங்கானா மாநிலத்தில் 3 ஆவது கட்ட தேர்தல் வரும் 17 ஆம் தேதி நடைபெறும்.*

*>>><><><><<<*

*சூடான் Abyey-யில் உள்ள ஐநா பாதுகாப்புப் படை முகாமில் தீவிரவாதிகள் நடத்திய டிரோன் தாக்குதலில் பங்களாதேஷைச் சேர்ந்த ஆறு பாதுகாப்புப் படையினர் உயிரிழந்துள்ளனர்.*

*இந்த தீவிரவாத தாக்குதலுக்கு ஐநா பொதுச் செயலாளர் திரு அண்டோனியோ குட்ரஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.*

*உயிரிழந்த ஐநா பாதுகாப்புப் படை வீரர்களின் குடும்பத்தினருக்கும், பங்களாதேஷ் நாட்டு மக்களுக்கும் ஆழ்ந்த இரங்கல் தெரிவிப்பதாக அவர் கூறியுள்ளார்.*

*ஐநா பாதுகாப்புப் படையினர் மீது தாக்குதல் நடத்துவோரின் பேரில், சர்வதேச போர்க் குற்ற சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று திரு அண்டோனியோ குட்ரஸ் எச்சரித்துள்ளார்.*

*>>><><><<<*

*இந்தோனேஷியா சுமத்ரா தீவில் மழை வெள்ளத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை ஆயிரத்தை தாண்டியுள்ளது.*

*கடந்த இருவாரமாக அப்பகுதியில் ஏற்பட்டுள்ள மழை மற்றும் நிலச்சரிவினால் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும், 200 பேர் காணாமல் போயுள்ளதாகவும் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.*

*சுமத்ரா தீவில் ஏற்பட்டுள்ள மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 12 லட்சம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டு உள்ளதாகவும், தற்போது நிலைமை சீரடைந்து வருவதாக இந்தோனேஷிய அதிபர் திரு Prabowo Subianto கூறியுள்ளார்.*

*மலாக்கா ஜலசந்தி பகுதியில் ஏற்பட்ட புயல் காரணமாக தென்கிழக்காசிய நாடுகளில் பலத்த மழையும், நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளது.*

*தாய்லாந்து, மலேசியா, வியட்நாம் உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் ஏற்பட்டுள்ள மழை வெள்ளத்தால் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.*

*>>><><><<<*

*தாய்லாந்து - கம்போடியா நாடுகள் போர் நிறுத்தத்தை உடனடியாக அமல்படுத்த வேண்டும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார்.*

*மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் கடந்த அக்டோபர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட அமைதி ஒப்பந்தத்தை இருநாடுகளும் உடனடியாக செயல்படுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.*

*இந்நிலையில், போர் நிறுத்தத்திற்கான ஒப்பந்தம் இதுவரை இறுதி செய்யப்படவில்லை என்று கம்போடியா தெரிவித்துள்ளது.*

*>>><><><><<<*

***<u>விளையாட்டுச் செய்திகள்</u>***

*உலகக் கோப்பை ஸ்குவாஷ் போட்டியின், இறுதியாட்டத்தில் இந்தியா இன்று ஹாங்காங் சீனாவை எதிர்கொள்கிறது.*

*சென்னையில் இப்போட்டி பிற்பகல் நடைபெறுகிறது.*

*>>><><><><<<*

*சையத் முஸ்டாக் அலி கோப்பைக்கான கிரிக்கெட் போட்டியில் மும்பை – ஹரியானா அணிகளுக்கு இடையேயான ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது.*

*235 ரன் என்ற இலக்குடன் ஆடிவரும் மும்பை அணி சற்றுமுன்வரை 17 ஓவரில், 5 விக்கெட் இழப்புக்கு 228 ரன் எடுத்துள்ளது.*

*முன்னதாக ஆடிய ஹரியானா அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 234 ரன் எடுத்தது.*

*பஞ்சாப் – ஆந்திரா இடையேயான மற்றொரு போட்டி தற்போது நடைபெற்று வருகிறது.*

*>>><><><><<<*

*துபாயில் நடைபெற்று வரும் 19 வயதிற்குட்பட்டோருக்கான ஆசியக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தானுக்கு எதிராக முதலில் ஆடிவரும் இந்தியா சற்றுமுன் வரை 15 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 101 ரன் எடுத்துள்ளது.*

*மழையால் ஆட்டம் 49 ஓவர்களாக குறைக்கப்பட்டுள்ளது.*

*>>><><><><<<*

*இந்தியா - தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான மூன்றாவது டிவெண்டி டிவெண்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.*